முடைய தென் இந்தியாவில், குறிப்பாக சென்னை ராஜ்யத்தில் தயாரிக்கப்படுகிற நூலுக்கு கல்கத்தா மார்கெட் போன்ற வட இந்திய மார்கெட்டில் கிராக்கி குறைந்திருக்கிறது என்று சொல்லப் படுகிறது. அது வாஸ்தவம் தானா ?

The Hon. Sri R. VENKATARAMAN : In a free economy such temporary excesses of supply and demand cannot be avoided But I am not sure that this is due to new mills that have been started in North Indian States.

கூட்டுறவு நூற்பு ஆலையைத் துவக்குதல்

*134 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திண்டிவனம் வட்டம் சாரம் கிராமத்தில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை துவக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) திண்டிவனம் வட்டத்திலுள்ள சாரம் கிராமத்தில் 12,000 கதிர்களுடன் கூடிய கூட்டுறவு நூற்பு ஆலை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. அந்த ஆலையின் கட்டட வேலை பூர்த்தியாகும் தறுவாயில் உள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் அது உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க் கப்படுகிறது.

திரு. ஆ. தங்கவேலு : திண்டிவனம் கூட்டுறவு நூற்பு ஆலை சம்பந்தமாக கனம் அமைச்சர் அவர்கள் சொல்லிய மாதிரி முக்கால் வாசி கட்டட வேலை முடிவுபெற்று வருகிறது. அந்த ஆலையில் எப் பொழுது நூற்புவேலை துவங்கும் என்று நான் கேள்வி கேட்டேன், ஆனால், அந்தக் கேள்வியில் நூற்பு ஆலை துவங்கும் உத்தேசம் உண்டா என்று இருப்பதினால், இந்தக் கேள்வியைப் பார்ப்ப வர்கள் கட்டடம் முக்கால்வாசி முடிந்துவிட்டது, இப்பொழுது இந்த மாதிரி கேள்வி கேட்கிறார்கள் என்று தவறாகப் புரிந்து கொண்டு என்னை என்னுடைய நண்பர்கள் கேட்டார்கள். இப்படி நான் போட்ட ஒரு கேள்வியைத் தவறாகத் திருத்தியதற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனி யாவது நல்லமுறையில் திருத்தி அமைக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் கனம் அங்கத்தினர் எதை மனதில் வைத்துக்கொண்டு கேட்டார்களோ, அதற்கு பதில் கொடுத்திருக்கிறேன். 'இந்த ஆண்டு இறுதிக்குள் அது உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்று. கனம் அங்கத் தினர் எவ்விதம் கேள்வி கேட்டபொழுதும் கூட, இதையும் சேர்த்து பதிலில் கொடுத்திருக்கிறேன்.